## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 22–ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **தங்கப்பாண்டியன்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**22.01.2026 OS.139/2019 வா.சா.1 தங்கப்பாண்டியன்**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:**

1) நான் குடியிருந்து வரும் வீட்டின் சர்வே எண் என்னவென்றால் பழைய சர்வே எண். 270/3பா ஆகும், புதிய சர்வே எண்.546/15 ஆகும். மேற்படி சர்வே எண் சொத்திற்கு வடக்கே என்ன சர்வே எண் உள்ளது என்றால் சர்வே எண்.546/7 உள்ளது. மேற்படி சர்வே எண்.546/7 ல் பழைய வீடு ஒன்று உள்ளது என்றால் சரிதான் அது தற்போது இடிந்த நிலையில் உள்ளது. மேற்படி சர்வே எண்.546/7 ல் உள்ள வீடு இடிந்துவிட்டதாக நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் அதில் இந்த பிரதிவாதிகளின் தாயார் கௌரி குடியிருந்து வருகிறார் என்றாலும் சரியல்ல.

2) ஆணையர் அறிக்கையில் மேற்படி புல எண்.546/7 ல் கௌரி அம்மா தான் குடியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி புல எண்.546/7ல் உள்ள வீட்டிற்கு தனிக் கதவு எண், மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.546/7 ல் உள்ள வீட்டிற்கு கீழ்ப்புறத்தில் ஒரு கழிவறை உள்ளது என்றால் சரிதான். அந்த கழிவறையானது அரசு மானியத்தில் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. அரசு மானியத்தில் மேற்படி கழிவறை கட்டப்பட்டது என்பது குறித்த குறிப்புகள் மேற்படி கழிவறையின் முன்புறம் எழுதப்பட்டுள்ளது என்றாலும் அது ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் 2 வது முறையாக ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை சமர்பித்தபோது அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

3) தாவா புலத்தை முதல் ஆணையர் பார்த்தபோதே கழிவறை இருந்ததாக முதலாவது ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண். 546/15 க்கு தெற்கே சர்வே எண். 546/16 உள்ளது. மேற்படி சர்வே எண்கள் 546/7, 546/15, 546/16 ஆகிய புல எண்கள் சேர்ந்தது தான் நான் சொல்லும் பழைய சர்வே எண். 270/3பா என்றால் சரிதான். சர்வே எண்.270/3பா என்பது ஏனாதி கிராமத்தை உள்ளடக்கிய மொத்த சர்வே எண் என்றால் சரிதான்.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.01.22 17:45:45 +0530

மேற்படி சர்வே எண். 270/3 பா ஆனது எப்பொழுது 3 புல எண்களாக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் UDR காலத்திற்கு பின்னீடு ஏற்பட்டது.

4) UDR காலக்கட்டம் என்பது 1983 – 1984 ஆகும் என்றால் சரிதான். அதன் பின்னீடு 1989 – 1990 காலக்கட்டத்தில் தான் நத்தம் நிலவரி திட்ட துாய அடங்கல் ஏற்பட்டது என்றால் சரிதான். பழைய சர்வே எண் நத்தம் நிலவரி திட்ட சர்வே அடிப்படையில் தான் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் பழைய சர்வே எண். 270/3 பா ஆனது சர்வே எண். 546/7, 546/15, 546/16 ஆக உட்பிரிவுகள் செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 546/7 ல் பிரதிவாதியின் தகப்பனார் பாலசுப்பிரமணியன் குடும்பத்துடன் குடியிருந்து வந்ததன் அடிப்படையில் மேற்படி பாலசுப்பிரமணியன் பெயரில் தனித்து பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**( பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.01.22 17:46:03 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam